Reg. No. M. 2997.

தனிப்பிரதி அண 1.

ஆசிரியர் :
யாழ்ப்பாணம்
தென்கோவை
ச. கந்தைய பிள்ளை
தமிழ்ப் பண்டிதர்,
சிலோன்.

REPUBLIQUE FRANÇAISE

Liberté - Egalité - Fraternité

VITTAGAM

LE REDACTEUR
TENKOVAI
S. CANDIAH PILLAI
TAMIL PANDIT
JAFFNA
CEYLON.

JOURNAL HEBDOMADAIRE PARAISSANT LE JEUDI

வித்தகம்

வியாழக்கிழமை தோறும் வெளிவருவது

Bureau de la Direction :—
RUE D'AMBALATADOUAYER
MADAM NO. 4, Pondichery.

நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லா லரிது. குறள்.

காரியாலயம்:—
அம்பலத்தாடு ஐயர் மடத்து
வீதி நே. 4, புதுவை.

VOL. I. { புதுவை, பவ-ஷூ வைகாசி-மீ உருஉ (7—6—34) } No. 28.

திருமந்திரம்

பெண்ணல்ல வாணல்ல பேடல்ல மூடத்து
ளுண்ணின்ற சோதி யொருவர்க் கறியொணுக்
கண்ணின்றிக் காணுஞ் செவியின்றிக் கேட்டிடு
மண்ணல் பெருமையை யாய்ந்தது மூப்பே.

இயங்கு முலகினி லீச னடியார்
மயங்கா வழிசெல்வர் வானுல காள்வர்
புயங்களு மெண்டிசை போதுபா தாள
மயங்காப் பகிரண்ட மாமுடி தானே.

கழிவு முதலுங் காதற் றுணையு
மழிவு மதாய்நின்ற வாதிப் பிரானைப்
பழியும் புகழும் படுபொருண் முற்று
மொழியுமென் னுவி யுழவுகொண் டானே.

பெண்பாற் புலவர்கள்

யாழ்ப்பாணம் வேலணையூர்,
பண்டிதர் திரு கா. பொ. இரத்தினம்
அவர்கள் எழுதியது

(பதிப்புரிமை கட்டுரை ஆசிரியருக்கே உரியது)

(26-ம் வாரத்தொடர்ச்சி)

இன்னாரைப் பற்றிப் பாடியனவென அறியப்படாத செய்யுட்களிரண்டில் ஒன்று 'ஆனந்தப்பையுள்' எனுந்துறைபற்றியது. அதில்

"மண்ணுறு மழித்தலைத் தெண்ணீர் வாரத்
தொன்றுதாமுடுத்த வம்பகைத் தெரியல்
சிறு வெள்ளாம்பல் அல்லி யுண்ணும்
கழிகலமகளிர்"

என்று விதவைகளது துயர்நிலை சித்திரத்தில் தீட்டிக் காட்டியவாறு விளக்கமாகச் செய்யப்பட்டிருக்கிறது. மற்றது க்டைநிலை எனுந் துறைபற்றியது. அதில்

"பாம்புரி யன்ன வடிவின காம்பின்
கழைபடு சொலியின் இழையணி வாரா
ஒண் பூங் கலிங்கம்"

என்று மெல்லிய ஆடையொன்றைப் பற்றி விரித்துரைக்கப்பட்டிருக்கிறது. இதனால் பாம்பின் மெய்மறைப்போலவும், மூங்கிலின் அமைந்த வெள்ளிய தோல் போலவும் நுண்ணிய இழைகளால் மெல்லியனவாக செய்யப்பட்ட ஆடைகள் அக்காலத்தில் தமிழகத்திலுண்டென்பது பெறப்படுகிறது.

"கான்செழு நாடன் கடுந்தேர் அவியன் [என
ஒருவனையுடேயேன் மன்னே யானே"

என இவர் கூறியிருப்பதால் அவியன் எனும் பெயருடைய தலைவனைப் புகழ்ந்து பாடி அவனால் உபசரிக்கப்பட்டார் என்பதும் அறியக்கிடக்கிறது.

இன்னும்

"...ருன் (அவியன்) எவன்பரிகோ வெள்ளி [யது நிலையிய

என இவர் கூறியிருததலால் இவருக்கு சோதிடநூலறிவும் உண்டென்பது வெள்ளிடை, என்னை? அவியன் தன் நிலைமை கூறுகின்றான். ஆகையால் சுக்கிரன் வறட்சியை யுண்டாக்கத்தக்கதாக தெற்கினின்றாலும் அன்றேல் வேறெங்கு நின்றாலும் அதன் நிலைமைக்கு யான் சிறிதும் வருந்தேன் என்பது கருத்தாதலினென்க.

வீரரின் வீரத்தையும், வள்ளல்களின் வண்மையையும், காவலரது சிறந்த குணங்களையும், புலவர்களின் புலமையையும் தெள்ளுற்ற தீந்தமிழில் வடித்தெடுத்துக் கூறிய பல்லிசைகொள் புலமை நிறைந்த இம் மெல்லியலார் காலத்தில் கோவூர்கிழார், செங்கண்ணனார், ஆவூர் மூலங்கிழார், பெருந்தலைச் சாத்தனார், ஆடுதுறை மாசாத்தனார், ஐயூர் முடவனார் முதலிய புலவர்கள் பலர் இமிழ்கடல் வேலித் தமிழகத்தில் இருந்தனரென்பது பழந்தமிழ் நூல்களால் அறியக்கிடக்கிறது. இவர் காலம் கி. பி. இரண்டாம் நூற்றாண்டாகும்.

பேய்மகள் இளவெயினி

இவர் எயினக்குலத்திற் பிறந்தவர். பேயினது ஆவேசமுற்றவர். தேவராட்டி, பூசாரிச்சி எனினுமாம். புறநானூற்று உரையாசிரியர் 'இவள் பேயாயிருக்கக் கட்புலனாயதோர் வடிவு கொண்டு பாடினாளொருத்தி யெனவும், "இக்களத்து வந்தோர் யாவரும் பரிசில் பெற்றனர், கண்டு நின்னோடு எதிர்த்து பட்டோரில்லாமையான் எனக்கு உணவாகிய தசை பெற்றிலேன்" எனத் தான் பேய்மகளானமை தோன்றப் பரிசில் கடாயினளெனவும் கூறுவாருமுளர் என உரைத்தனர். இதனால் பேயே ஒரு பெண்ணுருக்கொண்டு பாடினது என்பது பெறப்படுகிறது. இவர் பாடிய செய்யுளில்

"பாடல் சான்ற விறல்வேந் தனும்மே
வெப்புடைய அரண்கடந்து
துப்புறுவர் புறம் பெற்றிசினே"

என வருதலினால் சேரனோடெதிர்த்தார் புறங்காட்டி ஓடினர் என்பதும், ஒருவரும் பொருது இறந்திலர் என்பது பெறப்படும். இஃது, எனக்கு உணவாகிய தசை பெற்றிலேன்' எனுங்கூற்றை வலியுறுத்தும். சிறந்த

"அரிமயிர்த் திரண்முன்கை
வாலிழை மடமங்கையர்
வரிமணற் புனைபாவைக்குக்
குலவுச்சினைப் பூக்கொய்து
தண்பொருநைப் புனல்பாயும்
விண்பொருபுகழ் விறல்வஞ்சிப்
பாடல்சான்ற விறல் வேந்தனும்மே
வெப்புடைய அரண்கடந்து
துப்புறுவர் புறம்பெற்றிசினே
புறம்பெற்ற வயவேந்தன்
மறம்பாடிய பாடினியும்மே
ஏருடைய விழுக்கழஞ்சிற்
சீருடைய இழைபெற்றிசினே
இழைபெற்ற பாடினிக்குக்
குரல்புணர்சீர்க் கொளைவல்பாண் மகனும் [மே
எனவாங்கு
ஒள்ளழல் புரிந்த தாமரை
வெள்ளி நாரால் பூப்பெற்றிசினே,
எனுஞ் செய்யுளே

இவர் சேரமான் பாலைபாடிய பெருங்கடுங்கோனைப் புகழ்ந்து பாடியது. இதன்பொருள்: திரண்ட முன்கையினையும் ஆபரணத்தையுமுடைய பேதைமகளிர் வண்டலிழைத்த சிற்றிற்கட்செய்த பாவைக்கு கோட்டுப் பூவைப் பறித்துக் குளிர்ந்த ஆன்பொருந்தத்து நீரின்கட் பாய்ந்து விளையாடும் வானைமுட்டிய புகழினையும் வென்றியையு

வித்தக நிறையுரை.

வித்தக நிறையுரை மணிமொழிக்கு மாழாழிகரை மோதப்பெற்ற இருநிதிக் குப்பையு மொதுக்குக் கோரிடனாகிய துறையடுத்த நந்தம் புதுவைக் கண்ணே! பைந்தமிழ்ச் சுவை பயக்கும் தமிழ்த்தாய்க்கு ஆற்றும் அன்பு நிறை தொண்டாய் வழங்கும் "வித்தகம்" என்னும் பத்திரிகை சின்னாட்களாக வரப்பெறுகின்றோம். இவ்வுயரிய பத்திரிகை சின்னாட்பல்பிணிமாந்தர்கள் கொண்ட அறிவு நோய் தீர்ப்பவனும் அமலம் என்ற அமுதை ஈவானுமாகி மிளிருகின்றது.

இப்பத்திரிகைத் தமிழுலகிற்குத் தரும் இன்ப நலன்களை எடுத்தெழுதுவது வானமுடிவு தேடுவதற்கென வெழுந்ததொக்குமென்பதிலையமில்லை. எழும் கட்டுரைகள் வெற்றுரைகளாகவில்லாது விடர், தூர்த்தர் அறியார் கேட்டு சிரித்து மகிழ்தற்கு இடனளியாது, கல்வி கேள்விகளில் தலைப்பெய்துவார் கண்டும் கேட்டும் பல்கால் மலிமேவி, அதனது தேனினுமினிய தெண்ணறுஞ் சுவையை செவ்விதின் ஊட்டுவதில் வல்லதாகி கற்போர் உள்ளத்தைக் காமுறக் கொள்ளைகொள்கின்றது என்பதை நாம் கூசாது எடுத்துரைக்குங்கால் எதிர்ப்பவர் எவரேனுமில்லையென்றே இழுக்கிலாது துணிந்து கூறுவேமாக!

சமயவாற்றல்களை எதிர்த்து நசுக்குவதற்குக் கங்கணங் கட்டிக்கொண்டவர்கள் உள்ள இந்நாளில் சமயத்தின் தத்துவங்களை ஒவ்வொருவரும் செவ்வனே யறிந்து பண்டைச் சமயங்களில் கண்ட உண்மைகளை இக்காலத்தும் தேடிக்கண்டு அதன் பேரின்பத்தில் மதுவுண்ட வண்டுபோன் மாழ்கிக் கிடக்கும்படி சமயங்களை எவ்வெவரும் புறக்கணிக்காது அதன் உண்மைகளை ஆன்றறிந்த அறிவினால் கண்டு இறும்பூதெய்தி சமயக்கட்டளையின்படி வழுவாது ஒழுகவும் செய்யும் என்பது கண்கூடாகக் காணத்தக்கதாம்.

பண்டைச் சமய உண்மைகளை பேரூக்கத்துடனும் வரம்பிலாற்றலுடனும் ஆனேறபோன்று உலகினர்க்கு எடுத்துக்காட்டித் தம்வாய்ப்படுத்த முன்வந்துளதை மீண்டும் காட்டாமலிருக்க முடியவில்லை. சமய வெறுப்புற்றவர்கள் இப் பத்திரிகையைப் படிப்பார்களாயின் பின்னர் சமயத்தை விட்டு மாறவும் சமயம் வேண்டாமென்று சொல்லவும் சமயத்திற்கு உலைவைக்கவும் மாட்டார்களென்பது திண்ணம்.

எத்தகத்தினின்றும் எழும்புத்தக புத்தகமாய வித்தகமே! நித்தகத்தன் அருட்டகத்தால் சித்தகத்து மெத்தகத்து சுத்தகப் பேரின்பமெய்தி, நத்தகத்தோர் உத்தகத்தமாசொழித்து, பெத்தகத்தையீர்த்து அத்தகத்தன் அடித்தகத்து நின்றருளப்பணித்து நீணிலத்தகத்து என்றும் பொன்றாப் பொருளாய் நின்று நிலவுவாயாக! வாழி.

குறிப்பு:—எமது "வித்தக"த்தை ஆர்வமுடன் முறையாகப் பெற்றுப் படித்து அதன் கண் வெளிவந்த ஒவ்வொரு கட்டுரையையும் செவ்வனம் ஆராய்ந்து, அவை, உலகில் சமயங்கள் என வழங்குவனவற்றின் ஆபாசங்களை எடுத்துக்காட்டி நியாயவாயிலாக மறுத்துச் சத்திய நெறியாகிய பண்டைச் சைவ நன்னெறியையே கற்பவர் உள்ளம் காமுறும் வண்ணம் பிரபல சுருதி பிரமாணங்கொண்டு நிறுவுமாற்றால், அவ்வுண்மைகளை நியாயவாயிலாக எதிப்பார்யாருமின்றி அனைவரும் இறும்பூதுடன் ஒப்புக்கொள்ள வேண்டியதாயிற்று என, அபிமானப் பேயால் ஆவேசிக்கப்படாது தமது தூய உள்ளெத்தெழுந்த ஆராமை மிகுதியால் உண்மையை உரைத்து இவ் அரிய பெரிய மதிப்புரையை வழங்கி, இத்தகைய "வித்தகம்" நீடு வாழுக என அதனை வாழ்த்திய உத்தமரும், தன் பெயர்க் காரணம் நன்கு புலப்படுமாறு உண்மைகளை அஞ்சாது எடுத்துக் காட்டி நியாயவாயிலாக நிறுவி இயலும் மாண்புடைய "நியாயாபிமானி" என்னும் செந்தமிழ் வாரத்தாளின் ஆசிரியருமாகிய இப் பெரியாருக்கு எமது மனமார்ந்த வணக்கத்தைச் சமர்ப்பித்தேயன்றி, வேறு உஞற்றற்பால கைம்மாறு யாதும் அறியகில்லேம் என்பதனை மிக்க பணிவுடன் தெரிவிப்பதொடு "நியாயாபிமானி" என்னும் இவ்வாரத்தாளும் கல்வி கேள்விகளிற் சிறந்து இதன் ஆசிரியரும் நீடுவாழும்படி ஞானசாரியனாகிய புதுவை நந்தி பொன்னடித் துணைகளைப் போற்றுகின்றோம்.

[ப—ர்]

மூடைய கருவூரின்கண் பாடுதற்கமைந்த வெற்றியை உடை அரசனும் அரணை அழித்து வலியோடெதிர்த்தவருடைய புறக்கொடையைப் பெற்றான் அத்தகைய அரசனது வீரத்தைப்பாடிய பாடினியும் அணிகலத்தைப் பெற்றாள். அவ்விறலிக்கு முதற்றுணையாகிய குரலிலே வந்து பொருந்தும் அளவையுடைய பாட்டைப்பாடவல்ல பாணனும் பொற்றாமரையாகிய வெள்ளிய நாராற்றொடுத்த பூவைப் பெற்றான். (யான் அது பெறுகின்றிலேன்) என்பது.

இதனால் வஞ்சி நகரின் வளமும் சேரனது வீரமும் கொடையும் கூறப்பட்டிருக்கிறது.

(தொடரும்)

அறிவிப்பு

கடிதர்களின் அபிப்பிராயங்களுக்கு அவர்களே பொறுப்பாளிகள்.

உ

திருவருள் துணை

காலமுண் டாகவே காதல்செய்
துய்மின் கருதரிய
ஞாலமுண் டானொடு நான்முகன்
வானவர் நண்ணரிய
ஆலமுண் டானெங்கள் பாண்டிப்
பிரான்றன் அடியவர்க்கு
மூலபண் டாரம் வழங்குகின்
றான்வந்து முந்துமினே.

(திருவாசகம்)

வித்தகம்

புதுவை,

பவ-ஸ்ரீ வைகாசி-மீ 25உ

அடியார் பெருமை

அடியார் பெருமை சொல்வதற்கு அரியது; அளவிடுதற்கும் அரியது.

"தொண்டர்தம் பெருமை சொல்லவும்
பெரிதே
அடியர்தம் பெருமை அனைக்கவும்பெரிதே."

என்றனர் பெரியார் எனின், அவர் தம் அருமை பெருமை எம்போலிய சிவரால் அளவு கூட உரைப்பது எளிதாகுமா? அடியார் என்பவர் யார்? எனின், அவர்தாம் எம்பெருமான் திருவடியைக் கண்டவர் — திருவடியைப் பற்றினவர்—திருவடியில் எறினவர் என்று கூறப்படும். அஃதாவது பலகோடி சென்ம நற்றவப் பயனால் கயிலை முதற் குரவனாகிய சற்குரு நாதன் தரிசனம் பெற்று அவனால் சடபேதம் கர்மபேதம்என்பனவற்றிற்கு ஏற்ப அருளப்படும் சாதக யோகங்களை வழுவறத் தாங்கி ஒழுகி "உற்ற ஆக்கையின் உறுபொருள்" ஆகிய எம்பெருமான் திருவடியைக் கண்டவரே—பற்றினவரே—திருவடியில் எறினவரே — பொன்னம்பலத்து ஆடல் கண்டவரே வாய்மையான அடியவர் எனப்படுவர் என்பது. அடியவர் தொண்டர் சைவர் தமிழர் என்பன ஒருபொருட் கிளவி.

தொண்டர் = சற்குருநாதன் அருள் வழி நின்று பணி செய்து கிடப்பவர்.

சைவர் = சிவசம்பந்தம் உடையவர் சைவர் இலக்கணம் "வித்தகம்" 1-ம், 2-ம் இலக்கங்களில் விளக்கிக் கூறப் பட்டது. ஆங்குக் காண்க.

தமிழர் = அள்ளூறுக்கை (அள் + ஊறு + ஆக்கை) யாகிய அமுதயாக்கை யுடையவர்.

திருவாசகம்

"........................உருகுவ
தின்னக் கொண்டோ ருருச்செய் தாங்
[கெனக்
கள்ளூறுக்கையமைத்தன னொள்ளிய
கன்னற் கனிதேர்களிறெனக் கடைமுறை
என்னையு மிருப்ப தாக்கின னென்னிற்
கருணை வான்தேன் கலக்க
அருளொடு பராவமு தாக்கினன்
பிரமன்மா லறியாப் பெற்றி யோனே.

(ஷை—திருவண்டப் பகுதி)

தமிழ் என்றால் அமிழ்தம் என்பர் ஆலத்தை அமுதமாக்கியவர்—அசுத்த தநுவாகிய மலதநுவை "காயத்துள் மெய்ஞ்ஞானக் கள்" என்னும் அமுதம் ஊறும் விமலதநுவாக்கியவர். தமிழர்—தமிழர் என்னும் மெய்யடியார் என்க.

திருவுந்தியார்

காயத்துள் மெய்ஞ்ஞானக் கள்ளுண்ண
[மாட்டாதே
மாயக்கள் ளுண்டாரென் றுந்தீபற
வரட்டுப் பசுக்களென் றுந்தீபற. (43)

திருவாசகம்

மாய வாழ்க்கையை மெய்யென் றெண்ணி
[மதித்தி டாவகை நல்கினான்
வேய தோளுமை பங்க னெங்கள் திருப்பெ
[ருந்துறை மேவினான்
காயத் துள்ளமு தூற வூறநீ கண்டு
[கொள்ளென்று காட்டிய
சேய மாமலர்ச் சேவ டிக்கணஞ் சென்னி
[மன்னித் திகழுமே.

(ஷை—சென்னிப்பத்து செ. 5.)

பின் வரும் பிரமாணங்கள் அடியவர் இலக்கணத்தையும் அருமை பெருமையையும் நன்கு புலப்படுத்தும்.

சுந்தரர் தேவாரம்

மண்ணுலகிற்பிறந்துநின்னை வாழ்த்தும்
[வழியடியார்
பொன்னுலகம்பெறுதலொன்றேண்டனே
[னின்றுகண்டொழிந்தேன்)
விண்ணுலகத்தவர்கள்விரும்பவெள்ள
[யானையின்மே
லென்னுடல்காட்டுவித்தானொடித்தான்
மலையுத்தமனே.

(ஷை திருநொடித்தான்மலை செ. 5.

திருவாசகம்

கானூர் புலித்தோ லுடைதலையூண்காடுபதி
ஆனா லவனுக்கிங் காட்படுவா ராரேடீ
ஆனாலுங் கேளா யயனுந் திருமாலும்
வானாடர் கோவும் வழியடியார்
[சாழலோ.

(ஷை திருச்சாழல் செ. 12.)

திருமந்திரம்

அடியா ரரனடி யானந்தங் கண்டோ
ரடியா ரானவ ரத்தரு ளுற்றோ
ரடியார் பவரே யடியவ ராமா
லடியார்பொன் னம்பலத் தாடல்கண்
[டாரே.)

(ஷை 9-ம் தந். திருக்கூத்துத் தரிசனம்—
பொற்பதிக் கூத்து செ. 19.)

இயக்கு மூலகினி லீச னடியார்
மயக்கா வழிசெல்வர் வானுல காள்வர்
புயங்களு மெண்டிசை போதுபா தள
மயங்காப் பகிரண்ட மாமுடி தானே.

(ஷை 7ம். தந். அடியார் பெருமை. செ 6)

இவற்றால் அடியார் பெருமை நன்கு புலப்படும். வானுலகு ஆள்வது வழியடியார் இலக்கணம் என்பது மேலே காட்டப்பட்ட பிரமாணங்களாலும் நன்கு புலப்படும்—மயங்கா வழி= அமலப்படி யேற்றம். மயங்கா வழி செல்லும் மெய்யடியார்நித்தியத்துவம் பெறுவர். அன்றி மாயை வலைப்பட்டு மயங்கி இறந்து பிறவி வலைப்படமாட்டார்.

"புயங்களு மெண்டிசை போதுபா தாள
மயங்காப் பகிரண்ட மாமுடி தானே."

என்பதனால் மெய்யடியார் ஆற்றல் எம்போலிய சிவரால் அளப்பரியன என்பது வெள்ளிடை யாகின்றது. அமலப்படி கண்ட மெய்யடியார் ஆற்றல் முன்னும் இப்பத்திரிகைகள் பலவற்றில் விளக்கிக் கூறப்பட்டமையின் ஈண்டும் விரித்தல் மிகையாகும்.

எம்பெருமான் அடியவர் உடலில் குடி புகுந்து அவர் சிந்தையுள்ளே தேனூறி நின்று செடியார் உடலைச் செலநீக்கிப் பிறவியை ஒழிப்பன். பின்வரும் பிரபல சுருதிகள் இவ் உண்மையை நன்கு புலப்படுத்தும் :

திருவாசகம்

"............... ....
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற்
[போலச்
சிறந்தடியார் சிந்தையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கு மெங்கள் பெருமான்
...."

(ஷை சிவ புராணம்.)

அரைசனே யன்பர்க் கடியனே னுடைய
அப்பனே யாவியோ டாக்கை
புரைபுரை கனியப் புகுந்துநின் றுருக்கிப்
பொய்யிருள் கடிந்தமெய்ச் சுடரே
இரைபொரா மன்னும் அமுதத்தெண்
[கடலே

திருப்பெருந் துறையுறை சிவனே
உரையுணர் விறந்துநின் றுணர்வதோ
[ருணர்வே
யானுன்னை யுரைக்குமா றுணர்த்தே.

தந்ததுன் தன்னைக் கொண்டதென்
[தன்னைச்
சங்கரா யார்கொலோ சதுரர்
அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றதொன் றென்பாற்
சிந்தையே கோயில் கொண்டவெம்
[பெருமான்
திருப்பெருந் துறையுறை சிவனே
எந்தையே ஈசா வுடலிடங் கொண்டாய்
யானிதற் கிலனோர்கைம் மாறே.

(ஷை கோயிற்றிருப்பதிகம் 3, 10.)

அடியா ரானீ ரெல்லீரு மகல விடுமின்
[விளையாட்டைக்
கடிசே ரடியேவந் தடைந்து கடைக்கொண்
[டிருமின் திருக்குறிப்பைச்
செடிசே ருடலைச் செலநீக்கிச் சிவலோ
[கத்தே நமைவைப்பான்
பொடிசேர் மேனிப் புயங்கன்றன் பூவார்
[கழற்கே புகவிடுமே.

(ஷை யாத்திரைப் பத்து, செ. 4.)

திருவாய்மொழி

அடியேன்சிறியஞானத்த னறிதலார்க்கு
[மரியானை
கடிசேர்தண்ணந்துழாய்க்கண்ணி
[புனைந்தான்றன்னைக் கண்ணனை
செடியாராக்கையடியாரைச் சேர்தல்
[தீர்க்கும் திருமாலை
அடியேன்காண்பானலற்றுவனி தனில்
[மிக்கோரயர்வுண்டே.

(ஷை நம்மாழ்வார்—வனவேழ். 7.)

மெய்க் குடத்தைப் பற்றி யேறு
மெறும்புகள் போல் நிரந்து எங்கும்
கைக்கொண்டு நிற்கின்ற நோய்காள்
காலம்பெற வுய்யப் போமின்
மெய்க் கொண்டு வந்து புகுந்து
வேதப் பிரானார் கிடந்தார்
பைக்கொண்ட பாம்பணை யோடும்
பண்டன்று பட்டினங் காப்பே.

(ஷை பெரியாழ்வார்.)

என்னை முற்றுமுயிருண் டெம்மாய
[வாக்கையிதனுள்புக்கு
என்னை முற்றும்தானேயாய் நின்றமாய
[வம்மான்சேர்
தென்னன் திருமாலிருஞ்சோலைத் திசை
[கைகூப்பிச் சேர்ந்தயான்
இன்னம்போவேனேகொலோ என்கொ
[லம்மான் திருவருளே.

(ஷை நம்மாழ்வார், 10-ம் பத்து 7-வது.)

அடியவர் உடலம் சாதலைத் தரும் அசுத்த நிறை நீங்கி அள்ளூறாக் கையாய் அமலமடைந்து சூக்குமமாய் அருள்வடிவாகும்—வாய்மையான இல் ஆகும்—வீடு ஆகும் என்க. அஃதாவது அசுத்த தநுவானது சாதக யோகங்களால் முறையே பொன்மயமான ரக்ஷகதேகமாய் "ஈனமில்காயம்" என்னும் ஓ வடிவமாய்—அருள்வடிவமாய் வாய்மையான வீடாகும் என்பது. யாண்டும் நீக்கமற நிறைந்த அருளே—அருளாகிய சத்தியே இடமாகும் போது—இடமாகிய வீடாகும் போது, அவ் அருளைப் பிரியாத உயிர்—சிவமாகிய உயிர் அடைதற்குரிய வேறு இடந்தான் எது? வீடுதான் எது? இதனால் ஊன் அமலமடைந்து அருள் வடிவாக அதனைப் பிரியாது அமலமடைந்த உயிர் சிவமாகும்—சிவாங்கமாகும் என்னும் வேத உண்மை வெள்ளிடைமலைபோல் விளக்கம் பெறுதல் கண்டு கொள்க.

சுந்தரர் தேவாரம்

தானெனைமுன் படைத்தானதறிந்துதன்
[பொன்னடிக்கே
நானெனபாடலந்தோ நாயினேனைப்
[பொருட்படுத்து
வானெனைவந்தெதிர்கொள்ளமத்தயானை
[யருள்புரிந்து
ஊனுயிர்வேறுசெய்தானொடித்தான்மலை
[யுத்தமனே.

(ஷை திருநொடித்தான்மலை, செ. 1.)

என்பதன் உண்மைப் பொருள் இதுவே என நன்கு கடைப்பிடிக்க. "வேறு செய்தல்" என்றால் என்னை? அது தான் மாற்றமடையச் செய்தல்

என்பது. மாறிப் பிறத்தல்—துவிசத்துவமடைதல் என்னும் வேத உண்மையை உணரும் ஆற்றலுடையார்க்கு இவ் உண்மை எளிதிற் புலப்படாததாகுமா? ஊன் அமலமடைந்து அருள் வடிவான சத்தியாகவும், அதனைப் பிரியாத உணர்ச்சி வடிவாய உயிர் சிவமாகவும் மாற்றமடையும் என்பதே இதன் பொருளாகும்.

இவ்வுண்மையையே பெரியநாயகி அருளால் சாம வேதத்து "அசி" பதப்பொருளை உரைக்க எழுந்த வேதாகமோக்த சிவாத்வைத உண்மைச் சைவசித்தாந்த நூலாகிய சுத்த சாதகமும் நன்கு வற்புறுத்தியது என அறிக. (ஷை, செ. 19, 32, 60 பார்க்க). சுத்த சாதக மாண்பு அமயம் நேரும்போது விளக்கிக் கூறப்படும்.

சுந்தரர் உடம்போடு கயிலை புக்கனர் என்னும் உலகப் பிரசித்தியான உண்மைக்கு மாறாக "ஊன் உயிர் வேறு செய்தான்" என்னும் மறைமொழிக்கு, எம்பெருமான் அன்னவர் உடலையும் உயிரையும் பிரித்து விட்டனன்—மரணமடையச் செய்தனன் எனப் பொருந்தாப் பொய்யுரை புகன்று சிவாபராதிகளாதல், மிக்க கீழ்நிறைப் பொலிவுடைய பாமரர் நீர்மையேயன்றி ஒரு சிறிதாவது உண்மையை ஆய்ந்துணரும் மதியுடையார் நீர்மையன்று என்பது சொல்லாமலே அமையும். உரைக்கினும் உணரார். பக்குவமின்றிப் பழுக்குமா? மெய்யடியார் அமல தநுவானது சூக்குமமாய் ஞானாகாசத்தில் மறைந்து ஒடுங்குவதேயன்றி, உலக மாக்கள் அசுத்த தநுக்கள் போலப் பிணி மூப்புக்களால் பிணமாகி விழுமாட்டா. அவர் உடலை விட்டு உயிர் பிரியமாட்டாது, புரிசடையோன் புறப்பட்டுப் போகான் என்க. அவர் உடலும் உயிரும் ஒழிவற ஒன்றி நித்தியத்துவம் பெறும் என்பதே வேத வுண்மை யாகும்.

இவ் வுண்மை இதுகாறும் எமது "வித்தக" வாயிலாக வெளிவந்த கட்டுரைகள் பலவற்றால் வேதம், உபநிடதம், திருவாசகம், தேவாரம், திருமந்திரம், திருவாய்மொழி, ஔவை குறள் முதலிய எத்தனையோ பல பிரபல சுருதிப் பிரமாணங் கொண்டு வெள்ளிடை மலைபோல விளக்கி நிறுவப்பட்டதாதலின் மேலும் விரித்தல் மிகையாகும்.

இலங்குகின்ற சேவடியாகிய புகலிடம் அடையப் பெற்ற அடியவரே அருளாளராய் உய்தியடைய வல்லராவர். வித்தை என்னும் வேடத்தானும் புறவேடங்களானும் உலகமாக்களை ஏமாற்றி அவர்கள் மதிப்புப் பெற்றுச் செடியூனுடலோம்பி அடியவராகும் பக்குவம் சிறிதும் அடையப்பெறாது, புகலிடம் அறியாது அகலிடத்தே நின்று நீலிக் கண்ணீர் வடித்து அப்பனே! அரசே! எனக் கூவிக் குழறுவதால் அருளைப் பெற்று உய்ய முடியுமா? அடியவராக முடியுமா ?

திருவாசகம்

புரள்வார் தொழுவார் புகழ்வாரா யின்றே
[வந்தா ளாகாதீர்
மருள்வீர் பின்னை மதிப்பாரார் மதியுட்
[கலங்கி மயங்குவீர்
தெருள்வீராகி லிதுசெய்மின் சிவலோ
[கக்கோன் திருப்புயங்கன்
அருளார் பெறுவா ரகலிடத்தே
[அந்தோ அந்தோ அந்தோவே.

(ஷை யாத்திரைப் பத்து. செ. 10.)

என அருளியது எமது அருமைக் கண்மணிக்குள் மணியாகி விளங்கும் மாணிக்க மணி அல்லவா ? புகலிடம் எது ? அகலிடம் எது? இதனை உற்று நோக்கினுர் உண்டோ ? திருவாசகத்தை வாளா படித்துவிட்டாற் போதுமா? "தேவாரம் ஓதிக் குடி கெடுப்பார் ஆண்டே." எனப் பெரியார் (ஞான வெட்டி) கூறியதன் உண்மைதான் என்னை? இலங்குகின்ற சேவடியைக் கண்ட—பொன்மயமான பூங்கழல்கள் கண்ட—அமல முதற்படி கண்ட மெய்யடியார் நீர்மையை உலக மாக்கள் அறிவது எளிதாகுமா? அவர் ஒழுக்கங்களின் உண்மைகளையும் பிறர் அறியமாட்டார். அவர் போன்றவரே அவரை அறிவர். அவர் பால் போலி வேடங்கள் ஒன்றுங் காணப்படமாட்டா. வாய்மையான வேடமே—வித்தக வேடமே அவர்பால் உள்ளது என்க. இத்தகைய மெய்யடியாரே செயற்கரிய செய்பவர். பின் வரும் பிரபல சுருதிப் பிரமாணம் இவ்வுண்மையைத் தெளிவுற விளக்கிக் காட்டும்:

ஏகாதச உபநிடத தாற்பர்ய வர்ணனம்

"பரம ஹம்ஸரென்னும் ஜீவன் முக்
"தர் நியமமாய் முண்டிதராயேனும்,
"ஜடாதாரிகளாயேனும், ஏகதண்ட
"தாரிகளாயேனும், திரிதண்டதாரிக
"ளாயேனும், வெள்ளாடையுடையவ
ராயேனும், சிவப்பாடை யுடை
யவராயேனும் இருந்திலர். அவர்
"தங் குறிகள் வெளிப்படை யல்லா
"தன போன்றே ஆசாரங்களுமாம்-
"—அந்த அவ்யக்த ஆசாரமுடைய
"மகாத்மாக்கள் இவ்வாறுலகத்தின்
"கண்ணே சஞ்சரிப்பர்; அவர் மதியும்
"அவ்யக்தமேயாம், அவருடைய
"பிரகிருதியும் அவ்யக்தமேயாம்,
"அவர்தங் குறியும் அவ்யக்தமேயாம்.
"சில சமயத்தே அவர் எல்லாப்
"பொருள்களி னிச்சையற்றவரா
"யிருப்பர், சில சமயத்தே பற்றுற்ற
"வரைப் போல எல்லாப் பொருள்
"களி னிச்சையுற்றவராய்ப் புலப்படு
"வர். சில சமயத்தே அவர் முற்று
"முணர்ந்தவரைப் போல் எல்லாப்
"பொருளையுமுணர்ந்தவராய்த் தோற்
"றுவர்; மற்றொருகால் அஞ்ஞானி
"களைப் போல அறியாராய்த் தோற்
"றுவர். ஒருகால் அவர் நூலுணர்ந்தா
"ரைப் போலப் பண்டிதராய்த்
"தோற்றுவர்; மற்றொருகால்
"நூலுணர்வில்லார் போல மூட
"ராய்த் தோற்றுவர். ஒரு
"போதோ அவர் மதிமான்களைப்
"போல காணுவகையாய சேஷ்டை

“செய்பவராய்த் தோற்றுவர்; மற்
“றொரு போதோ ஜடரைப்போலச்
“சர்வ சேஷ்டைகளு மற்றவராய்த்
“தோற்றுவர். ஒரு சமயத்தே யவர்
“வாசாலபுருடரைப்போல நானாவகை
“யாய சப்தங்களை யுச்சரிப்பவராய்ப்
“புலப்படுவர்; மற்றொரு போதோ
“ஊமரைப்போல மவுனராயுலாவுவர்.
“ஒரு சமயத்தே யவர் இராகக்குருட்
“டுப் பாமரரைப்போல அத்தியந்தம்
“இராகமுடையராய்ப் பிரதிதியாவர்;
“மற்றொருகாலோ, விரக்தரைப்
“போலச் சர்வேச்சை யற்றவராய்த்
“தோற்றுவர். சில சமயத்தே யவர்
“மேன்மை மிக்கவரைப் போலச்
“சாஸ்திர விகித ஆசாரத்தைச் செய்
“வர்; சிலகாலோ தாழ்ந்தோரைப்
“போலச் சாஸ்திர நிஷித்த ஆசா
“ரத்தை ஆசரிப்பர்.

“இவ்வாறவர் அவ்யக்தமாய சின்
“னத்தையும் ஆசாரத்தையுமடைந்து
“உலகத்தே சஞ்சரிப்பர். இத்தகைய
“பரமஹம்ச சந்நியாசிகளைப் பார்த்து
“எவரும் இவர் மேன்மையரென்
“றேனும், அதிகசாஸ்திரம் படித்தவ
“ரென்றேனும், மேன்மை மிக்க
“ஆசாரமுடையவரென்றேனும் இல்ல
“வரென்றேனும், மறையரென்றே
“னும், பறையரென்றேனும், துற
“வியரென்றேனும், இல்வாழ்வோ
“ரென்றேனும் அறியமுடியாதாம்.

“இத்தகைய ப்ரஹ்ம வேத்தாவாய
“சந்யாசிகளின் ஆசாரத்தை எம்மதி
“மானும் அறிய முடியாது என்னும்
“வார்த்தை தத்தாத்திரேய சம்
“ஹிதையின் கண்ணும் பிரசித்த
“மாம்.”

புற வேடங்களாலும் போலி வித்தையாலும் போலிச் சத்துவத்தாலும் மயக்கும் பேயுலகம் மெய்யடியார் இயல்பை அறிவது முடியாத காரியம். சித்திரக் கற்பனைகளையே மெய் என நம்பிப் பிரமை அடைவது உலகியல். வித்துவான்களும் வேடதாரிகளும் ஒருவகை உபாசனைச் சாமிமாருமே தற்காலத்தவரால் மெய்யடியார் என்று போற்றப்படுகின்றனர். இதனால் மெய்யடியார் பெருமை மறைந்துவிட்டது. வாய்மையான சைவம்—சத்தியநெறி— வாய்மையான ஒழுக்கம் மறைந்துவிட்டது—மறைந்து கிடக்கின்றது. எங்கே மறைந்து கிடக்கின்றது? சண்டாள உலகம்தூஷிக்கும் சேற்றில் தான் மறைந்து கிடக்கின்றது. மறைந்து பங்கமடைந்திருக்கின்றது. (பங்கஜம்=தாமரை) அப் பங்கத்தை நீக்கி, அப்பங்கமெனும் குற்றம் பொருந்திய சேற்றுள் இருக்கும் —இட்ட வித்தாய் இருக்கும்—மறை பொருளாய் இருக்கும் — மறையாய் இருக்கும் அதனை விளைவேற்ற வேண்டும். தாமரை வித்துச் சேற்றிலன்றி வேறு எங்கும் ஆக்க முறமாட்டாது என்பது பட்டாங்கு அல்லவா? சேற்றைப் புறக்கணித்து ஒருபால்ஒதுங்குவதால்—முன்னிலைகளை முன்னிலையாகிய ஆக்கையை—சிவையை அலட்சியம் செய்தால், அவ் “ஆக்கையின் உறுபொருள்” ஆகிய திருவடியைக் கண்டு அடியவராக முடியுமா? சேற்றையே— பங்கத்தையே பங்கமாகிய வியாபகத்தையே முக்கியசாதனமாகக் கொண்டு, அச்சேற்றை நிறை கண்டு பஞ்சீகாணித்து ஆக்கத்துக்கு உரியவற்றை அச் சேற்றிலேயே கண்டு—சேறுகிய ஊத்தைக் குழி, காற்றக்குழி துரமைக் குழியிலேயே கண்டு, ஆண்டுள்ள அமல அக்கினியை உண்டு அச் சேறு என்னும் பங்கம்—குற்றம் தனைப் பற்றுதவாறு இயங்கி—அசைந்து மதிவைராக்கியத்தோடு பணிசெய்து கிடக்கவேண்டும்.

நன்கொடை

“வித்தகம்” எனும் எமது பத்திரிகைக்கு மனமுவந்து நன்கொடையாக ரூபா மூன்று அளித்த சிலோன், (Ceylon) கால்(Galle), கோட்டை(Fort) திருவாளர் டாக்டர். ஜே. தாதாபாய் (Dr. J. Dadabhoy) அவர்களுக்கு எமது மனமார்ந்த வணக்கம் என்றும் உரிமையாகற் பாலது.

[ப—ர்]

அப்பொழுதன்றே தாமரை வித்து —திருவடித்தாமரை (தாம் + மறை + மலர்) ஆக்கமுற்று உருவம் பெற்றுப் பங்கம் என்னும் பிருதிவியினின்றும் வெளியேறி அப்பு தத்துவத்தையும் கடந்து பரிசுத்தம் பெற்று மலரா நிற்கும்! மலர்ந்தபின் அன்றே பிறர் அதனைக் கண்டு களிப்பர். காட்டில் இருக்கும் வண்டுகள் ஹ்ரீங்காரத்தோடு மிகவிரைவாக வந்து அம்மலர் மத்தியில் அமர்ந்து அமுதம் எனும் தேனை உண்டு தெவிட்டிக் களித்து மயங்கித் தெளிந்து கன்னிவனத்தை அடையும். “புடை சூழ்ந்த பூதங்கள் வேதம் பாடப் புலியூர்ச் சிற்றம்பலத்தே நடமாடு” (ஞானசம்பந்தர்) வன் அப்பன் என்க. அப்பொழுதன்றே இறைவனைத் தூவெள் ஏற்றிற் காணலாம். அப்பொழுதன்றே அடியவர் அருமை புலப்படும். பெருமை திகழும், நாற்றிசையும் சிவ மணம் கமழும். சைவம் திகழும். துட்ட நிக்கிரக சிட்ட பரிபாலனம் நிகழும், வேத உண்மை வெளிப்படும். தெய்வத்தமிழ் மணக்கும் புதுமைகள் காட்டப்படும். போலிக் கொள்கைகள் விட்டப்படும். சத்திய நெறி காட்டப்படும் — இத்தன்மை வாய்ந்தவரன்றே அடியவர். இவரன்றே சைவர். இவரன்றே சிவம் பேணிய பெரியார் — மெய்கண்ட மேலோர் என்க.

சேற்றைப் புறக்கணித்து வேறுடம் புகுந்து திருவடி மலர் கண்டு அடியவராகி உய்தியடையலாம் என்பது ஆகாயத்தாமரையை அவாவி அலமருதலையே ஒக்கும் என்க. பின்வரும் பிரமாணங்கள் போலி வேடங்களால் ஆகும் தீமைகளையும் மெய்யடியார்க்குரிய வித்தக வேடம் இன்னது என்பதனையும் அவர் இயல்பையும் நன்கு புலப்படுத்தும்.

திருமந்திரம்

ஆடம்ப ரங்கொண் டடிசிலுண்பான்பயன்
வேடங்கள் கொண்டு வெருட்டிடும்பேதை [கா
ணாடியும் பாடியு மழுது மரற்றியுந்
தேடியுங் காணீர் சிவனவன் றன்கணே.

ஞானமி லார்வேடம் பூண்டிந்தநாட்டிடை
ஈனம தேசெய் திரந்துண் டிருப்பினு
மான நலங்கெடு மப்புவி யாதலா
லீனவர் வேடங் கழிப்பித்த லின்பமே.

(டை 6ம். தந். அவ வேடம் செ. 1, 2.)

புன்ஞானத் தோர்வேடம் பூண்டும் பயனி [ல்லை
நன்ஞானத் தோர் வேடம்பூணு ருணண் [ணித்
தன்ஞானத் தோர்சம யத்தரி சன்னோர்
பின்ஞானத் தோரொன்றும் பேசகில் [லாரே.

கத்தித் திரிவர் கழுவடி நாய்போற்
கொத்தித் திரிவர் குரக்கனி ஞானிக
ளொத்துப் பொறியு முடனு மிருக்கவே
செத்துத் திரிவர் சிவஞானி யோர்களே.

ஞானிக்குச் சுந்தர வேடமு நல்லவாந்
தானுற்ற வேடமுந் தச்சிவ யோகமே
ஆனவவ் வேட மருண்ஞான சாதன
மானது மாமொன்று மாகாதவனுக்கே.

(டை—டை—ஞானவேடம் செ, 1,4,6)

நாரத பரிவிராஜ கோபநிஷத்

"ந தண்ட தாரணேந நமுண்டநேந [ந வேஷேண
ந டம்பாசாரணேந முக்தி............"

(இ-ள்.) தெண்டத்தைப் பிடித்துக் கொள்ளுகிறதினுலேயாவது தலையை மொட்டையடித்துக் கொண்டு இருக்கிறதினுலேயாவது வேடத்தினுலாவது முத்தி கைகூட மாட்டாது என்பதாம்.

குறள்

மழித்தலு நீட்டலும் வேண்டாவுலகம்
பழித்த தொழித்துவிடின்.

(டை—கூடாவொழுக்கம், செ. 10.)

எனத் தேவர் கூறியதும் அறிக.

முன்னிலைக்கோரணிக்கு அஞ்சாது திருவருணாட்டத்தோடு பணிசெய்து கிடக்கும் மெய்யடியாருக்கு யாதும் இடையூறும் நிகழமாட்டாது; மரணம் நேரமாட்டாது; அவர் உடலை விட்டு உயிர் பிரியமாட்டாது, அவர் உடலும் உயிரும் ஒழிவற ஒன்றி நித்தியத்துவம் அடையும் என்பது சத்தியம். அறுபான் மும்மை நாயன்மாருள்ளே சிலர் சரீரத்துக்கு ஊறுபாடு நேர்ந்து அதனுல் அவர் இறந்துவிட்டனர்எனவும், ஆதலால் மரணமும முத்திதான் எனவும் கூறி அமைந்து தமது கூற்றுக்குச் சேக்கிழார் பெரிய புராணத்தைச் சான்று காட்டி விடுவாரும் உளர். இது சேக்கிழார் திருவுளப் பாங்கினை அறியாதார் போலிக் கூற்றே என்பது அமயம் நேர்ந்துழி விரித்து விளக்கப்படும்.

இதுகாறும் கூறியவைகளால் மெய்யடியார் இலக்கணமும், அருமை பெருமையும், அவர் புறவேடங்களால தம்மைக் காட்டுபவரல்லர் என்பதும், அவர் மரணமடைய மாட்டார் என்பதும், அவர் உடலும்உயிரும் ஒழிவற ஒன்றி நித்தியத்துவம் அடையும் —சிதாகாசப் பரவெளியில் கலக்கும் என்பதும் ஒருவாறு உணரத்தகும்.

சுபம்.

வித்தகம்

வருட சந்தா விவரம்

முன் பணம்

இந்தியா, பர்மா, சிலோன் ரூ. 3-0-0
மலாயா, சிங்கப்பூர், சைகோன் } ரூ. 4-0-0

வித்தக நிலையம்,
புதுச்சேரி.

"வித்தகம்"

பழைய பிரதிகளின் கிரயம்

1-வது நெம்பர் தனிப்பிரதி விலை அணு 4.
2-வது „ „ „ 4.
3-வது முதல் 20-வது வரையில் பிரதி ஒன்றுக்கு விலை அணு 2.

வேண்டுவோர் தபால் முத்திரை அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்.

வித்தகம் ஆபீஸ்.
புதுவை.

வித்தகம்

முதல் வருட ஆறுமாத சஞ்சிகைகள் புத்தகமாக கட்டப்பட்டன.

		ரூ.	அ.	ப.
முதுகில் தோல்—கலிக்கோ (Half Leather— Calico Bound)	...	2	8	0
முழு கலிக்கோ— (Full Calico Bound)	...	2	4	0
முதுகில் கலிக்கோ—மார்பில் தாள் (Calico-marble Bound)	...	2	0	0

(தபால் செலவு பிரத்தியேகம்)

வித்தகம் ஆபீஸ்,
புதுவை.

Sandhanam Printing Works, Pondicherry. Le Gérant, R.Nagarattinam